# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

1981 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க கொன்சியூலர் தொழிற்படு சட்டத்திற்கமைய, தற்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவினால் அறவிடப்படும் கொன்சுலர் கட்டணங்கள் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மாற்றியமைக்கப்படவுள்ளது.

மாற்றியமைக்கப்பட்டுள்ள கொன்சுலர் கட்டணங்கள் பின்வருமாறு:

a) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் கல்விச் சான்றிதழ்களுக்கு ரூ.500.00
b) வெளிநாட்டு பிரஜை ஒருவருக்கு இலங்கை அரசினால் வழங்கப்படும் எந்தவொரு ஆவணத்திற்கும் ரூ.1500.00
c) எந்தவொரு ஏற்றுமதி ஆவணத்திற்கும் ரூ.6,000.00
d) வேறு எந்தவொரு ஆவணத்திற்கும் ரூ.800.00

இவ் விடயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை http://www.documents.gov.lk/files/egz/2017/11/2044-39_T.pdf எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு முந்தைய கொன்சியூலர் கட்டண மாற்றம் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்டது.

அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி மக்களுக்கு வினைத்திறனான மற்றும் விளைதிறனான கொன்சியூலர் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு அறியத்தருவதில் அமைச்சு பெருமிதமடைகின்றது.

ஆவணங்களை உறுதிப்படுத்தல் தொடர்பான மேலதிக விபரங்களை கீழ்காணும் வலைத்தளத்திலிருந்து பெற முடியும்:
http://www.mfa.gov.lk/index.php/en/consular-services/authentication-of-documents-

கொன்சுலர் சேவைகள் தொடர்பான மேலதிக தகவல்களை பின்வரும் கொன்சுலர் அலுவல்கள் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்:

***கொன்சுலர் அலுவல்கள் பிரிவு***
2 ஆவது மாடி, செலிங்கோ கட்டிடம்
ஜனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
தொ.இல: 011238812 (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை
மு.ப 8.30 - பி.ப 4.15 வரை)
தொலைநகல்: 0112473899
மின்னஞ்சல்: consular@mfa.gov.lk

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2017 நவம்பர் 30